மலர் 1 இதழ் 1 ஜுலை, 2016 ISSN : 2454-3993

# சேலம் ஆறுமுகன் நாவலில் இன்றைய சமுதாயத்தின் போக்கு: ஒரு பார்வை

**இரா. அனுஷா**
தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர்,
சேலம் சௌடேஸ்வரி கல்லூரி,
சேலம்.

**முன்னுரை**

இலக்கியங்கள் சமுதாயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சமுதாயப் பார்வையுடைய இலக்கியங்கள் காலத்தை வென்று நிற்கும் தன்மை வாய்ந்தவை. அவ்விலக்கியங்கள் சமுதாய உணர்வுகளைப் பிரதிபலிப்பதால் மக்கள் அதை விரும்பிப் படிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். உரைநடையுடன் கூடிய புதின இலக்கியம் கண்ணையும், பொருளையும் ஈர்த்து நிற்கின்றன. புதினமானது சமுதாயத்தையும், வரலாற்றையும் அடிப்படையாகக்கொண்டு விளங்குவதால் அவை சமூகப் புதினம், வரலாற்றுப் பதினம், துப்பறியும் புதினம் என்று மூன்று வகையாக வகுக்கப்படுகிறது.

**சமுதாயம்**

“சமுதாயம் என்பது எப்பொழுதுமே மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கும்” (அகிலன், கதைக்கலை, பக்கம் 10). அதனால் சமுதாயமானது தனது வளர்ச்சியில் பல மாறுபட்ட நிகழ்ச்சிகளைச் சிந்தித்துக் கொண்டே இருக்கும். அதில் மிகச் சிறப்பு வாய்ந்தவை வரலாற்றில் இடம் பெறுவது உண்டு. இந்த வரலாற்றினைக் காணும்போது சமுதாய வளர்ச்சியில் மனிதன் எவ்வாறெல்லாம் பட்டை தீட்டப்பட்டுள்ளான் என்பது தெரியும். மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை இரு வகைப்படுத்தலாம் என்பர். அவை:

1. சமுதாயத்தில் மனிதன் ஏற்படுத்தும் பாதிப்பு
2. சமுதாயம் மனிதனிடம் ஏற்படுத்தும் பாதிப்பு

மேலே கண்ட இருவகை பாதிப்புக்களையும் உள்ளடக்கியதாக நாவல் காணப்படுகிறது (அ.சாந்தா, அகிலன் நாவல்களில் தனிமனிதனும், சமூகமும், பக்கம்–155). தனியாக வாழ்ந்த மனிதன் கூடிவாழத் தொடங்கிய பொழுதே சமுதாயம் உருவாகிவிட்டது. மனிதன் கூடி வாழ்வதுதான் சமுதாயம் எனப்பட்டது. “உயர்திணை அஃறிணைப் பொருள்களின் கூட்டத்தைச் சமுதாயம் எனக் கருதக்கூடாது” (அ.மு. பரமசிவானந்தம், சமுதாயமும், பண்பாடும், பக்கம்–25) என்ற கூற்று இங்கு நினைக்கத்தக்கது. சமூகம் எப்படி மனிதனை உருவாக்குகிறது என்பதனை வாழ்வில் காணும் வண்ணமே படைப்பில் காட்டுவார் படைப்பாளி என்பார் திறனாய்வாளர்.

**சமுதாயமும், வாழ்க்கையும்**

நல்லதொரு குடும்பம் உயர்ந்ததொரு மனிதனை உருவாக்க எழுத்தாளனின் படைப்புகள் உறுதுணையாக அமைதல் வேண்டும். ஒவ்வொருவரும் பிறக்கும்போது காணப்பட்ட

சமுதாயத்தைவிட மறையும்போது காணும் சமுதாயம் மிகச் சிறந்ததாக உயரிய நிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லை. படைப்பாளிகள் பெரும்பாலும் தங்களுடைய எண்ணங்களை சமுதாயத்தின் மீது செலுத்தி அவற்றின் போக்குகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். அவ்வகைப் படைப்புகளே மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. அக்கூட்டமைப்பு, வாழ்க்கை நிலையே சமூக வாழ்க்கை என வழங்கப்படுகிறது.

**சமுதாயமும் இலக்கியமும்**

சமுதாயம் இல்லையேல் இலக்கியம் இல்லை. சமுதாயம் என்பது மக்களின் கூட்டுக்குடும்ப இயக்கங்களையே குறிக்கின்றது. மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் இயக்கங்களிலும், அழகுணர்வுகள் அல்லது அவலவுணர்வுகள் வெளிப்படுதல் இயற்கை. இத்தகைய உணர்வுகளைப் படைப்பாளன் தன் அனுபவத்தையும், பட்டறிவையும் கலந்து இலக்கியம் ஆக்குகின்றான். அனுபவம் போன்றவற்றை அழகிய கலை வடிவங்களின் மூலமும் பகிர்ந்து கொள்கிறான். இலக்கியங்கள் சமுதாயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சங்ககால இலக்கியங்கள் காதல், வீரம், கொடை போன்ற கருத்துக்களை எடுத்துக்காட்டுபவையாக விளங்குகின்றன.வாழ்க்கையோடு நேரடியான தொடர்பு நாவலுக்கு உண்டு. ஏனெனில் அது மனிதர்களைப் பற்றியே பேசுகின்றது. மனிதர்களுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், தாபங்கள், குறிக்கோள்கள் இவற்றையும் அம்மனிதர்களின் இன்பதுன்பங்கள் பற்றியுமே கூறுகின்றது. மனித வாழ்வின் அடிப்படையான உணர்ச்சிகளை பற்றியே புதினம் பேசுவதால் அது வாழ்க்கையின் வாழ்க்கையாய் அமைகின்றது.

**சேலம் ஆறுமுகன் நாவலில் சமுதாயம்**

எந்த ஒரு எழுத்தாளரும் அவ்வக்காலச் சமுதாயக்காற்றைச் சுவாசித்தே வாழ்கிறான். அவன் எழுதுகின்ற எழுத்தோ, கவிதையோ மற்ற வேறு எந்த புதினங்களோ அவன் வாழ்கின்ற காலத்தின், சமுதாயத்தை பிரதிபலிப்பதாகவே அமைகின்றன.

**போலி மனிதர்கள்**

தேனை உறிஞ்சும் வண்டுபோல சமுதாயத்தில் சில நல்லவர்களை ஏமாற்றி உறிஞ்சிப் பிழைக்கும் போலியான மனிதர்களும் வாழவே செய்கின்றார்கள். "மோகனசுந்தரம் தன் எதிர்கால வாழ்க்கையை எண்ணி, தன் தங்கையின் திருமணத்திற்காக சேர்த்து வைத்த பணத்தையெடுத்து வேலைக்காக ஏமாற்றம் அடைந்து, கொடுத்துவிடுகிறான். மல்லப்பனும், சடையப்பனும் மோகனசுந்தரத்தின் அண்ணன், தங்கை... வேலை வாங்கித் தருவதாக சொல்கிறார்கள். அதை நம்பி மோகனசுந்தரம் ஏமாற்றம் அடைகிறான்" (சேலம் ஆறுமுகன், காத்திருக்கும் மலர்கள், பக்கம்–30). விலங்குகளுக்கு ஐந்து அறிவே மனிதனுக்கு ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் உண்டு. அந்த பகுத்தறிவு மனித இனத்துக்கு கொடுக்கப்பெற்ற ஒரு வரப்பிரசாதம் சமுதாயத்தில் உள்ள நன்மை தீமைகளையும், நல்லவர் கெட்டவரையும் உலக மெய்ம்மையும் சிந்தித்து பகுத்தறிந்து அதன்படி செயல்படவும் வாழவே நமக்கு ஆண்டவன் அவ்வறிவே கொடுத்துள்ளார்.

ஒவ்வொரு மனிதனும் அதைப் புரிந்துகொண்டு வாழ்வதே அறிவுடைமை. இல்லையெனில் மோகனசுந்தரத்தை வைத்து மக்கள் சமுதாயத்தை ஏமாற்றி பணம் சம்பாதிக்க நினைக்கும் போலியான மனிதர்களிடம் ஏமாற வேண்டிய நிலை ஏற்படும். இதுபோன்று மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் போலியான மனிதர்களைக் கொண்ட கூட்டம் சமுதாயத்தில் வாழ்வதை நாவலாசிரியர் சேலம் ஆறுமுகம் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**பொதுநலம்**

மனித வாழ்க்கை என்பது நிலையற்றது. அன்றாட வாழ்க்கையில் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளே வாழ்க்கையின் மெய்ம்மையை உணர்த்துகிறது. பிறவியின் பயனே மற்றவருக்குப் பயன்படும்படி வாழ்வதில்தான் அமைந்திருக்கிறது. அத்தகைய சுயநலம் இல்லாத பொதுநல வாழ்வுதான் நமக்கு மனஅமைதியையும், மகிழ்ச்சியான வாழ்க்கையையும் தரவல்லது. “காத்திருக்கும் மலர்கள்” நாவலில் வரும் தலைமைப் பாத்திரமான மாணிக்கவாசகம் தியாகம், அன்பு, ஒழுக்கம், உழைப்பு எல்லாம் உடையவர். இவருக்கு மூன்று பிள்ளைகள். இவர் தமிழ்ப் பாடத்தையும், கல்வியையும் கண்ணெனக்கொண்டு, நான் வேறெதையும் எமது பிள்ளைகளுக்கென்று சேர்த்துக் கொண்டதில்லையே, தமிழையும் அதன் புகழையும் நேசித்த யாம், பொருளையும், பூமியையும் சேர்க்க யோசிக்கவில்லையே... அதனால்தான் எமது பிள்ளைகள் பட்டதாரியாக பட்டினி வயிறாக, யாராவது கையூட்டு வாங்காமல் பணியில் அமர்த்திக் கொள்ளமாட்டார்களா? மனிதனாக எந்த மனிதனாவது பிறந்திருக்க மாட்டானா? எனத் தேடி அலைய வேண்டிள்ளதே என மாணிக்கவாசகத்தின் கூற்றாக சேலம் ஆறுமுகன் அவர்கள் பொதுநல நோக்கோடு கூறியுள்ளார்.

**ஊழல்**

“காத்திருக்கும் மலர்கள்” புதினத்தில் ஆசிரியர் படித்த பட்டதாரிகள் எந்தளவிற்கு ஏமாற்றம் பெறுகிறார்கள். ஊழல் எந்தளவிற்கு தலைவிரித்து ஆடுகின்றது என்பதை விளக்கியுள்ளார். முத்துமல்லப்பனும், சடையப்பனும் தன் வாழ்க்கையே பொய்யும், சூது, சூழ்ச்சி, சுயநலம், சுரண்டல் எல்லாத் தொழிலும் இவர்களிடம் உள்ளன. “உங்க வீட்டில மூணு பட்டதாரிங்க இருக்காங்க... நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க இந்த மாசத்திலேயே மூணு பேத்துக்கும் உத்தியோகம் வாங்கி கொடுக்கறது எங்க பொறுப்பு”. “ஆமா முதல்ல வேலைக்கு மனு எழுதி எங்க கையிலே குடுங்க” “ஏன்னா, நீங்க அனுப்பினா வேலை ஆகாது. இதெல்லாம் எங்களுக்கு தண்ணிபட்டப்பாடு”. “உங்களுக்குத் தெரியாது நாங்க நினைச்சா எத்தனை பேருக்கு வேணுன்னாலும் சும்மா உட்காரவச்சி சம்பளம் கொடுக்க வைப்போம்” (சேலம் ஆறுமுகன், காத்திருக்கும் மலர்கள், பக்கம்–14) என்று பல பொய்களையும் சொல்லி இவர்கள் வாழ்க்கை வாழ்கிறார்கள் என இன்றும் சமுதாயத்தில் ஊழல் செய்யும் மனிதர்களைக் கண்முன் கொண்டு வருகிறார் சேலம் ஆறுமுகன். இன்றைய வாழ்வின் அடிப்படை சமூகமாகும் என்பது உண்மை. எனவேதான் சமுதாயத்திற்கும், இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு மிக நெருக்கமான ஒன்றாம் என்கிறார் கைலாசபதி (மு. இராமநாதன் முதலியார், சமூகவியல், ப.22). சிக்கல் வாய்ந்த சமுதாயத்தை புதின இலக்கியத்தின் மூலம் திருத்த முடியும். இப்பணியைச் சிறப்புறச் செய்ய புதின ஆசிரியர்களால் மட்டுமே முடியும். சமுதாயம் சீர்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் சேலம் ஆறுமுகனார். எனவேதான் அவர் எழுதும் புதினங்களில் சமுதாயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதை முக்கியப்பங்கு வகிக்கின்றார். பொதுநலத்தை தன் நலம் என கருதியும், தன்னலம் கருதாமல் பிறர் நலம் கருதி வாழும் மக்கள் மனிதர்கள் இச்சமுதாயத்தில் வாழவே செய்கிறார்கள் மற்றும் சமுதாயத்தில் மக்களை ஏமாற்றி பிழைக்கும் போலியான மனிதர்களைக் கொண்ட கூட்டம் சமுதாயத்தில் வாழ்வதையும் தம் புதினத்தின் மூலம் விளக்குகிறார் சேலம் ஆறுமுகன்.